ணத்தால் அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு "அவரவர் தகுதியைப் பொறுத்தது" என்று சொன்னேன். அது அங்கத்தினர்களை உள்ளடக்கியது அல்ல; அது என்னுடைய நோக்கமும் அல்ல. ஆராய்கிறவர்களுடைய தகுதிக்கேற்ப, அவர்களுடைய மனப்பான்மைக்கேற்ப அது அமையும் என்ற முறையில்தான் நான் அவ்வாறு தெரிவித்தேன் என்பதை அங்கத்தினர் அவர்களுக்கும், அவைக்கும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: நான் மிகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

4. நடைமுறைக் கேள்விகள்.

(அ) திரு. நா. காசிராமன் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் பெயர் குறித்து.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தச் சட்டப் பேரவையில் குடந்தைத் தொகுதி உறுப்பினராக இருக்கும் திரு. நா. காசிராமன் அவர்கள் காங்கிரஸ் (ஓ) விலிருந்து காங்கிரஸ் (என்) க்குப் போயிருப்பதாகவும், அவருக்கு வேறு இடம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் அப்படி மாறிவிட்டதாகச் சட்டப் பேரவைத் தலைவருக்குக் கடிதம் அனுப்பி இருக்கிறாரா? காங்கிரஸ் (ஓ) வில் இருந்து அவருடைய ராஜினுமா ஒப்புக்கொள்ளப்பட்டதாகக் கடிதம் வந்திருக்கிறதா? அவருடைய ராஜினுமா ஒப்புதல் பெருத நிலையில் அவருக்குத் தனி இடம் ஒதுக்கி இருப்பது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காசிராமன் அவர்கள் காங்கிரஸ் (ஓ) விலிருந்து ராஜினுமா செய்து விட்டதாகப் பேரவைத் தலைவருக்கு அறிவித்திருக்கிருர்கள். அவருடைய ராஜினுமா ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டதா, இல்லையா என்பது முக்கியமான விஷயம் அல்ல. காசிராமன் அவர்கள் காங்கிரஸ் (ஓ) வில் இருந்து விலகி . . . . . இன்னொரு காங்கிரசுக்கு என்ன பெயர்?

திரு. நா. காசிராமன்: நான் காங்கிரஸ் (ஆர்) என்று எழுதி இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காங்கிரஸ் (ஆர்) என்றால் என்ன என்று தெரியவில்லை. அவர் இருந்த கட்சியில் இருந்து விலகி இந்த மன்றத்தில் வேறு இடம் வேண்டுமென்று கேட்ட நிலையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் ரீதியான மாநிலக் கட்சி இருக்கிறது. அந்தக் கட்சிக்காரர்களால் இவர் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிருரா என்று தெரியவில்லை. அவர்கள் காங்கிரஸ் (ஓ) விலிருந்து ராஜினுமா செய்ததை ஏற்றுக்கொண்டார்களா இல்லையா என்பது, காசிராமன்

அவர்கள்தான் முடிவு செய்யவேண்டிய விஷயம். ஆனால் துருதிருஷ்டவசமாக அந்தக் கட்சி இந்த மன்றத்திற்குள் இல்லை. அப்படி நம் சட்டமன்றத்திற்குகுள் இருந்திருந்தால் அதன் தலைவரோ மற்றவர்களோ அதுகுறித்து அதிகாரபூர்வமாக தெரிவித்திருக்க முடியும். திரு. காசிராமன் அவர்கள் அந்தக் கட்சியில் சேந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சட்ட சபைக்கு ஒரு சங்கடமான நிலை ஏற்பட்டு விடும் என்பதால், அந்தக் கட்சில் அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று சொன்னால், அதிகாரப்பூர்வமான தலைவரிடமிருந்து அதற்கான ஒரு அத்தாட்சியும் அவர்கள் அனுப்பவேண்டிய ஒரு பிரச்சினை தான் இந்த மன்றத்தின் முன்னால் இருக்கிறது. அது பற்றிய ஒரு கேள்வி எழுந்ததால், இது ஒரு ஒழுங்குப் பிரச்சினைக்கு உட்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் இந்த அவையில் புதிதாக ஒரு கட்சியை அறிமுகப் படுத்துகிறார்கள். அவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தங்கள் அனுமதியின் பேரில் ஒரு விளக்கம். திரு. காசிராமன் அவர்கள் இந்திரா காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள், ஆதலால் வேறு ஸீட் அளிக்கப்பட்டிருக் கிறது என்று தாங்கள் விளக்கம் கூறியிருக்கிறீர்கள். இது சம்பந் தமாக காங்கிரஸ் (ஓ) விலிருந்து ஏதாவது தகவல் தங்களுக்கு வந்திருக்கிறதா ? அல்லது தாங்களாவது ஏதாவது தகவல் கேட்டி ருக்கிறீர்களா காங்கிரஸ் (ஓ) விலிருந்து என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுவரை தகவல் வர வில்லை என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இப் போது தாங்களாவது புதுத் தகவலை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (ஆரவாரம்.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : புதுத் தகவல் எனக்கு ஒன்று மில்லை. முதல் அமைச்சர் அவர்களிடத்தில் தகவல் ஏதாவது கைவசமிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றத்திற்கு அந்தத் தகவல் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. இந்த மன்ற உறுப் பினராக இந்த மன்றத்தில் இருப்பதற்கு அவர்களுக்கு அந்தத் தகுதி, உரிமை உண்டு. அவர்கள் எந்த நிலையில் இருக்க விரும்பு கிறார்கள் என்பதுதானே தவிர எங்கே இருந்தார்கள், எங்கே போகிறார்கள் என்பதல்ல பிரச்சினை. புதிதாக ஒரு கட்சியை இந்த மன்றத்திற்கு அறிமுகப்படுத்தியிருக்கிற காரணத்தினால், அந்தக் கட்சி இந்த மன்றத்திற்குள் இல்லாத காரணத்தினால் அவர்கள்தான் கொஞ்சம் தகவல் அனுப்ப வேண்டியிருக்கிறது என்றுதான் எடுத்துச் சொன்னேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : காங்கிரஸ் (ஆர்) என்றால் என்ன வென்று சொல்லவில்லை.

As the hon. Member has used the expression '(R)', the House would be interested to know to which party he is referring to. What exactly is the expansion of the letter 'R' and we do not know it. There may be 'R' in Delhi but so far as Tamil Nadu is concerned, there is no 'R' as the D.M.K. is the ruling party. I would like to know whether it would be possible to elicit further information from the hon. Member, Thiru Kasiraman.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்கள் இங்கு ரூலிங் கட்சியாக இல்லாவிட்டாலும் ரூலிங் கட்சியின் பக்கம் இருப்பவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயரில் எதுவும் இல்லை. ரோஜா என்பதற்கு வேறு என்ன பெயர் வைத்தாலும் ரோஜா ரோஜா தான் என்று சொல்வதுபோல் பெயரைப் பற்றி நாம் ரொம்ப நேரம் அலட்டிக் கொள்ளக்கூடாது. பெயர் என்பது ஒரு அடையாளம்தான். அந்தந்த நேரத்திற்குத் தகுந்தமாதிரி பெயர் அமையலாம்.

5. அறிவிப்புகள்

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறை விதிகள் 6(1) விதியின்கீழ் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களை மாற்றுத் தலைவர்களாக நான் நியமித்திருக்கிறேன் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

(1) திரு. மா. வெ. கரிவேங்கடம்.

(2) திருமதி ஜோதி வெங்கடாசலம்.

(3) திரு. நா. வீராசாமி.

(4) திரு. நீ. அன்புச்செழியன்.

(5) திரு. என். கே. பழனிசாமி.

(6) திரு. எம். ஏ. லத்தீப்.

6 அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 23 (1)-ஐத் தள்ளிவைத்து அரசினர் அலுவலை எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 23 (1)-வது விதியைத் தள்ளி வைத்து இப்பேரவை இன்று அரசினர் அலுவலை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே தங்கமணி: தலைவர் அவர்களே, இடைத் தேர்தலுக்குப் பிறகு நம் சட்டமன்றம் கூடுவது இது மூன்றாவது தடவையாகும். முதல் தொடரில் நமக்கு நான்-அஃபிஷியல் டே என்பது இல்லாமல் போய்விட்டது. காரணம் அப்பொழுது